CC.No. 101/2019 (JM.No.II, DHARMAPURI)

18.02.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரி ஆஜர்)**

**PW–1 : திரு. கிருஷ்ணமூர்த்தி (வனசரக அலுவலர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அரூர் வனப் பொறியியல் கோட்டத்தில் வனசரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 15.12.2016 ம் தேதி மாலை சுமார் 04.40 மணியளவில் நானும், என்னுடன் திரு. M. அண்ணாமலை, வனக்காப்பாளர் மற்றும் திரு. குமரேசன், வனக்காப்பாளர் ஆகியோர் உடன் இருந்தோம் அப்போது எதிரி கையில் கோடாளி மற்றும் பையுடன் காணப்பட்டார். அவரை விசாரித்த போது கோடாளி மூலம் சந்தன மரத்தை வெட்டியதாக சொன்னார். அவரை விசாரித்து சந்தன மரத்தை சோதனை செய்து என்னால் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தருமபுரி வனசரக அலுவலகத்திற்கு அழைத்து வந்தோம். எதிரியை விசாரிக்க அவரே தானாக வந்து எந்தவித தூண்டுதலுமின்றி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சந்தன மரத்தை வெட்டி கொண்டிருந்த போது என்னை பிடித்து விசாரித்து குற்றத்தை ஒப்பு கொண்டதால் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக ஒப்பு கொண்டார். திரு. அண்ணாமலை, வனக்காப்பாளர் H படிவம் தயார் செய்தார். தற்போது அவர் இறந்துவிட்டார். திரு.குமரேசன், வனக்காப்பாளர் எடைபட்டியல் தயார் செய்தார். அதில் சந்தன கட்டையின் எடை 1.800 இருந்தது. இவற்றை வனச்சரகம் அலுவலரிடம் காண்பித்து அவை சந்தன கட்டை என்று உறுதி செய்து வழக்கு பதிவு செய்தார். பின்பு அடுத்த நான் சந்தன கட்டையுடன் மாவட்ட வன அலுவலர் வசம் சென்று சந்தன கட்டை மற்றும் பிடிபொருட்களை ஒப்படைத்தோம். கோடாரி **சா.பொ.1**, கொடுவாள் **சா.பொ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.18 17:48:41 +0530

**CC.No. 101/2019 (JM.No.II, DHARMAPURI)**

**18.02.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரி ஆஜர்)**

**PW–2 : திரு. குமரேசன் (வனவர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வேலூரில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.12.2016 ம் தேதி தொப்பூர் வடக்கு பீட் வனக்காப்பாளராக இருந்த போது வழக்கம் போல் நாங்கள் ரோந்து பணியில் சென்ற போது தொப்பூர் வனச்சரகம் அருகில் நானும், S. கிருஷ்ணமூர்த்தி, வனவர் மற்றும் திரு. M. அண்ணாமலை, வனக்காப்பாளர் ஆகியோர் உடன் இருந்தோம் அப்போது சந்தேகத்திற்கு இடமாக ஆஜர் எதிரி கையில் கோடாளி மற்றும் பையுடன் காணப்பட்டார். அவரை விசாரித்த போது கோடாளி மூலம் சந்தன மரத்தை வெட்டியதாக சொன்னார். அவரை விசாரித்து சந்தன மரத்தை சோதனை செய்து என்னால் கைப்பற்றுதல் மகஜர் மூலம் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது. பின்னர் எதிரியை தருமபுரி வனசரக அலுவலகத்திற்கு அழைத்து வந்தோம். எதிரியை விசாரிக்க அவரே தானாக வந்து எந்தவித தூண்டுதலுமின்றி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். நான் சந்தன மரத்தை வெட்டி கொண்டிருந்த போது என்னை பிடித்து விசாரித்து குற்றத்தை ஒப்பு கொண்டதால் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக ஒப்பு கொண்டார். திரு. அண்ணாமலை, வனக்காப்பாளர் H படிவம் மற்றும் தோராய வரைபடம் தயார் செய்தார். தற்போது அவர் இறந்துவிட்டார். நான் எடைபட்டியல் தயார் செய்தேன். அதில் சந்தன கட்டையின் எடை 1.800 இருந்தது. இவற்றை வனச்சரகம் அலுவலரிடம் காண்பித்து அவை சந்தன கட்டை என்று உறுதி செய்து வழக்கு பதிவு செய்தார். பின்பு அடுத்த நான் சந்தன கட்டையுடன் மாவட்ட வன அலுவலர் வசம் சென்று சந்தன கட்டை மற்றும் பிடிபொருட்களை ஒப்படைத்தோம். படிவம் 95 மூலமாக 16.12.2016 அன்று வழக்கு சொத்து எண். 02/2016 பெறப்பட்டது. படிவம் 95 **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தோராய வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.18 17:48:49 +0530